**தலைப்பு 111 – சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு**

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதென்றும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.3(ஆ) மற்றும் (இ) பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்குகள் தொடர்பாக இணக்கக் கூற்று** | | |
| 2017 யூலை 05 ஆம் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் விடய இலக்கம் 11101 என்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான | 2019 திசெம்பர் 03 ஆம் திகதி 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியாக இருந்ததுடன் எதிர்காலத்தில் குறித்த திகதியில் கணக்குகளை சமர்ப்பிக்கப்படும் என்பதை குறிப்பிட்டுக் |

| | | |
|---|---|---|
| முற்பண கணக்குகள் தொடர்பாக இணைக்கக் கூற்று 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்யையின் பிரகாரம் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2 ½ மாதங்களுக்கு மேற்பட்ட தாமதத்தின் பின்னர் 2020 மே 26 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் இணைக்கக் கூற்று குறித்துரைத்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கொள்கின்றோம். |

1.6.2 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தேவைகளுக்கு புறம்பான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக் கூற்றுக்களில் ஆங்களம் மற்றும் தமிழ் பிரதிகள் 04 மாதங்கள் அளவிலான தாமதத்தின் பின்னர் 2020 யூலை 15 ஆம் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தாமதமின்றி மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அவதானிப்பு சரியானது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய நிதி ஏற்பாடான ரூபா 3,248 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவின ஒழிப்பு (ஏசீஏ-2 படிவம்) தனியான நிரலொன்றில் காண்பிக்கப்பட்டமையின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கபட வேண்டும். | அரச கணக்குகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏசீஏ-2 படிவத்தில் நிதி ஏற்பாட நிறுத்தி வைப்பதற்காக நிரலொன்று காணப்படாமையினால் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,248 |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக மீளாய்வாண்டின் மொத்த தேறிய நிதி ஏற்பாடு அதற்கு சமமான பெறுமதியினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஒவ்வொரு செலவின விடயங்களிலும் தேறிய நிதி ஏற்பாட்டை போல சேமிப்பும் சரியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | மில்லியனால் குறைத்து பதியப்பட்டிருந்ததுடன், எதிர்வரும் வருடங்களில் இவ்வாறான வழுக்களை மாற்றியமைக்கப்படும். |
| (இ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏ.சீ.ஏ. – பீ படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் மூலம் இனங்காணப்பட்டுள்ள அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரிப் படிவத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன், எதிர் வரும் வருடத்தின் போது இவ்வாறான வழுக்களை குறைக்குமாறு நிதிக் கூற்றுக்களை தயாரித்த சமர்ப்பிக்கப்படும். |

1.6.3 நிதி நிலைமைக் கூற்று

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ---------------- | ------------------------------------ |
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமை தொடர்பான கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நடைமுறையல்லா சொத்துக்களின் கிரயம் மற்றும் அதற்குரிய ஒதுக்கம் ரூபா 167,974.85 மில்லியனாக இருந்து. எனினும், திறைசேரி கணக்குகள் கூற்றின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 167,999.22 மில்லியன் ஆனமையால் வேறுபாடு ரூபா 24.37 மில்லியனாக இருந்தது. | திறைசேரி அச்சிடல் குறிப்புக்கயில் காணப்படுகின்ற பெறுமதி மற்றும் புத்தகப் பெறுமதியின் பிரகாரம் புத்தகங்களின் பிரகாரம் பெறுமதிகளுக்கு இடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை இணக்கம் செய்து சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (ஆ) | 2017 திசெம்பர் 31 இல் | இந்த தவறை சரிசெய்து | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறான வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கிரயம் ரூபா 36,548.12 மில்லியன் தொகை குறைவாகவும். கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கிரயம் ரூபா 32,350.82 மில்லியன் தொகை அதிகரித்தும் 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாக பதியப்பட்டிருந்தமையினால் காணிகளின் கிரயம் ரூபா 42.743.43 மில்லியன் ஆக பதியப்படாமையின் காரணமாக 2018 ஆம் ஆண்டின் சொத்துக்களின் கிரயம் ரூபா 46,940.73 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த தவறை சரி செய்வதற்காக 2019 சனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதிகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அதில் ரூபா 7,102.99 மில்லியன் ஆரம்ப மீதிகளில் சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் போது காணி கைப்பற்றலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்து வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தயாரித்து சமர்ப்பிக்கபட வேண்டும். | |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் ரூபா 14,793.13 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டமையினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதன சொத்துக்கள் அதற்கு சமமான பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | சமர்ப்பிக்கப்பட்ட நிதி | கூட்டலில் வழுக்கள் | கணக்காய்வு |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமைக் கூற்று தொடர்பான கூற்றின் பிரகாரம் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 120,885.40 மில்லியனாக இருந்த போதிலும், நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 6 மாதிரி படிவத்தின் ) பிரகாரம் அப்பெறுமதி ரூபா 117,020.52 மில்லியன் ஆனமையால் வேறுபாடு ரூபா 3,864.88 மில்லியனாக இருந்தது. அவ்வாறே நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றின் (ஏசீஏ – 6 மாதிரி படிவத்தில்) இன் பிரகாரம் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கிரயம் ரூபா 99,038.01 மில்லியன் மற்றும் இயந்திரங்கள் உபகரணங்களின் கிரயம் ரூபா 20,697.58 மில்லியன் ஆனமையால் கூட்டு பெறுமதி ரூபா 119,735.59 மில்லியன் ஆக இருக்க வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக அப்பெறுமதி ரூபா 117,020.52 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்படாதவாறு சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். இந்த தவறு சரிசெய்யப்பட்டு அடுத்து வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அவதானிப்பு சரியானது. |
| (உ) | நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 6 மாதிரிப் படிவம்) பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய நிர்மாணங்களின் கூட்டு மொத்த ரூபா 150,951 தொகை கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கூட்டுத் தொகையில் கொண்டுவரப்படாமையின் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் கிரயம் அதற்கு சமமான பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | திறைசேரி கணக்கு கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கைப்பற்றப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கிரயம் ரூபா 6,501.94 மில்லியன் தொகை நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 6 மாதிரிப் படிவம்) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. திறைசேரி கணக்குகள் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கைப்பற்றப்பட்ட வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கிரயம் ரூபா 10,505.27 மில்லியன் ஆக இருந்த போதிலும், அது ரூபா 19,974.49 மில்லியனாக நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 6 மாதிரிப் படிவம்) உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியல்லா சொத்துக்கள் ரூபா 2,967.27 மில்லியனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தவறு சரிசெய்யப்பட்டு அடுத்து வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (எ) | அமைச்சின் கீழ் உள்ள 03 வைத்தியசாலைகளில் நிர்மாணிக்கும் 03 செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 15.28 மில்லியன் தொகை, மூலதன சொத்துக்களை கைப்பற்றும் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாத ஏனைய செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக அதற்கு சமமான பெறுமதியால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியல்லா சொத்துக்கள் குறைத்து காண்பிக்கப்பட்ருந்தது. | இந்த தவறு சரிசெய்யப்பட்டு அடுத்து வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். | |

| | | |
|---|---|---|
| (ஏ) திறைசேரி இறுதி கணக்குகள் கூற்றின் பிரகாரம் ஏனைய முற்பண கணக்குகளின் கீழ் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,221.56 மில்லியன் மீதியொன்று காணப்பட்ட போதிலும், அது நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

1.6.4 கட்டுநிதி மீதி
------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவுகளின் கூட்டு மொத்தம் ரூபா 3,319.28 மில்லியனாக இருந்தது. அதில் 7002 இன் கீழ் திறைசேரி கட்டுநிதியாக ரூபா 177,478.56 மில்லியன் தொகையும் 7003 இன் கீழ் கட்டுநிதியாக ரூபா 2.5 மில்லியன் தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 177,481.06 மில்லியன் கட்டுநிதி கிடைத்திருந்தது. அமைச்சின் ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் கட்டுநிதி செலுத்துகைகள் ரூபா 180,585.32 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி ரூபா 215.02 மில்லியனாக இருக்க வேண்டும். எனினும், திறைசேரி இறுதி கணக்குகள் கூற்றின் பிரகாரம் கட்டு நிதி மீதி ரூபா 471.05 மில்லியனாக காணப்பட்டது. | கட்டுநிதி பெறுவனவுகள் செலுத்துகைகள் மற்றும் மீதிகள் சரியாக இனங்காணப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

| | | |
|---|---|---|
| (ஆ) அமைச்சினால் பேணிச் செல்லப்பட்ட 02 கட்டுநிதி கணக்குகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத மீதிகளின் கூட்டு மொத்த ரூபா 471.05 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 53.99 மில்லியன் தொகை 2020 மே 22 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்பட்ட 1977 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாத ரூபா 362,702 தொகை உள்ளடங்கியிருந்ததுடன், மேலும் ரூபா 18.74 மில்லியன் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் ஏற்பட்ட வழுக்களாக அறிக்கையிடப்பட்ட போதிலும், அந்த தவறுகள் சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. | கட்டுநிதி மீதியில் குறித்துரைத்த பிரகாரம் தீர்ப்பதற்கும் மாதாந்த இணக்கங்களைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

1.6.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களின் கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிரயம் ரூபா 167,974.85 மில்லியன் தொகையான நிதியல்லா சொத்துக்களுக்கான பட்டோலைகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அமைச்சின் சேவையை விட்டுச் சென்ற 107 வைத்தியர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக சரியான தகவல்கள் மற்றும் அறிக்கைகள் போன்ற எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்தமையா | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 42(அ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி கோரியிருந்த உறுதிச் சீட்டுக்கள், பட்டோலைகள், கோவைகள், அறிக்கைகள், தகவல்கள் மற்றும் ஏனைய சான்றுகளை வழங்குமாறு சகலருக்கும் பிழை ஏற்பட்டிருந்ததாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

| | | | |
|---|---|---|---|
| | ல், அதற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்துக்களை திருப்திகரமானதாக சான்றுருதிப்படுத்தவோ அல்லது உறுதிப்படுத்தவோ முடியாதிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.05 மில்லியன் கூட்டுத்தொகையான 03 கொடுக்கல் வாங்கல்களுக்குரிய 03 கோவைகள் 2020 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியாக இருந்ததுடன், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக 10 சந்தர்ப்பங்களின் போது கோரப்பட்ட அமைச்சினால் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள உபகரணங்கள் தொடர்பான தகவல்கள், அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருள் தொடர்பான தகவல்கள், அரசாங்கத்தின் 06 வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட பென்ஸ் வகையின் நோயாளர் காவும் வண்டிகளில் பொருத்தப்பட்ட செயற்கை சுவாச இயந்திரம் தொடர்பான தகவல்கள், அமைச்சுக்கு சொந்தமான வாகன அணி முகாமைத்துவத்திற்காக மென்பொருள் முறைமையொன்று ஸ்தாபித்தல் தொடர்பான தகவல்கள் குருநாகல் | -மேற்படி- | உரிய தகவல்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |

போதனா வைத்தியசாலையில் காணப்பட்ட பிரதி பணிப்பாளர் பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்கு தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்களுக்கு வாகனங்களை விநியோகித்தல் தொடர்பான தகவல்கள், அமைச்சு பதவியணியினர் தகவல்கள் விஷேட நிபுணத்துவ வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்திய உத்தியோகத்தர்களின் இடம் மாற்றங்களை அமுல்படுத்துதல் தொடர்பான தகவல்கள் ஒவ்வொரு விடய துறைகளுக்காகவும் இருக்க வேண்டிய விஷேச நிபுனத்துவ வைத்திய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்ட கடன் கோவைகள் தொடர்பாக முழுமையான தகவல்கள் என்பன 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.6 முறையற்ற மற்றும் அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

---

அமைச்சினால் அதிகார பலம் இன்றிய பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கண்டி தேசிய வைத்தியசாலையின் வாகனங்களுக்காக GPS உபகரணங்கள் 20 இனை வழங்கும் ஒப்பந்தம் 2017 யூலை 17 ஆம் திகதி கையளிக்கப்பட் போதும் கணக்காய்வு திகதியாகன 2019 யூன் 21 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்த | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிட வேண்டும். விளைவற்று காணப்படுகின்ற உபகரணங்களை பயன்படுத்துவதற்கு | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

| | | | |
|---|---|---|---|
| | காரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெறுகை சபையின் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய மாதாந்த வாடகையை விட 2017 யூலை 25 ஆம் திகதி முதல் 2019 செப்தெம்பர் 06 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ரூபா 366,072 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2019 யூன் மாதம் வரையிலும் 1 ½ வருடங்கள் அளவிலான காலம் முதல் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்த 03 வாகனங்களில் பொருத்தப்பட்ட GPS உபகரணங்கள் அவற்றிலிருந்து அகற்றப்பட்டு நோயாளர் காவும் வண்டி அல்லது ஏனைய தேவையான வாகனங்களுக்காக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அந்த உபகரணங்களுக்காக உரிய காலத்தில் ரூபா 199,327 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | கண்டி தேசிய வைத்தியசாலையின் வளவில் வலையமைப்பை ஏற்படுத்துதல் மற்றும் சுகாதார தகவல் முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிக்கும் ஒப்பந்தம் ரூப்பா 59.49 மில்லியன் பெறுமதி சேர் வரியுடனான தொகையில் கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கைக்கு முறணாக 230 நாள் கால தாமதத்தின் பின்னர் 2019 சனவரி 25 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 நவம்பர் 07 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தத்தின் இறுதி பட்டியலுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன். 230 நாட்களுக்காக ரூபா 6.49 மில்லியன் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இரசாயன பிரிவில் இரசாயன ஆய்வுகூடம், வெளி நோயாளர் இரசாயன ஆய்வுகூடம், வெளி | ஒப்பந்தத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முன் இறுதி பட்டியல்களுக்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டமை மற்றும் தாமதக் கட்டணம் அறவிடப்படாமை தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். முறைமையை ஸ்தாபிக்கும் நோக்கம் மற்றும் எதிர்பார்த்த பூர்த்தி மட்டங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்வதுடன் இது வரையில் சுகாதார தகவல் முறைமை சரியான பிரகாரம் அமுல்படுத்தப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | நோயாளர் பரிசோதனை அலகு, நோயாளர்களுக்கான மருந்து விநியோகிக்கப்படும் இடம், தோல் நோய் சிகிச்சை நிலையம் மற்றும் நீரிழிவு சிகிச்சை நிலையம் என்ற இடங்களில் 2019 நவம்பர் 11 மற்றும் 2019 நவம்பர் 27 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட கள பரிசோதனைகளின் போது அந்த பிரிவுகளில் சுகாதார தகவல் முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், முறைமை ஸ்தாபிக்கும் நோக்கம் மற்றும் எதிர்பார்த்த பூர்த்தி மட்டங்கள் அடையப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. சுகாதார தகவல் முகாமைத்துவ முறைமைக்காக வைத்தியசாலைகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட 125 கூம்பு நிரல் இயந்திரங்கள் மற்றும் 03 கூம்பு நிரல் அச்சிடல் இயந்திரங்கள் என்பன பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் பயனற்று வைத்தியசாலையின் களஞ்சியங்களில் காணப்பட்டதுடன், 04 பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்ட 02 கூம்பு நிரல் அச்சிடல் இயந்தரங்கள் மற்றும் 07 மடி கணனிகள் என்பனவும் பயனற்று காணப்பட்டது. | | |
| (இ) | 2006 இன் 12 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது அறவிடப்படுகின்ற கட்டணத்தில் 50 சதவீதம் அந்தந்த மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக அந்த பணம் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மேல் மாகாண சபைக்கு வழங்க வேண்டியிருந்த தொகையில் ரூபா 1.55 மில்லியன் தொகை தனியார் மருத்துவ நிறுவனங்களை | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன், ஏனைய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களின் போது பொருத்தமான பிரகாரம் சட்டம் திருத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

ஒழுங்குபடுத்தும் சபையினால் மாகாண சபைக்கு நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்காக நேரடியாக செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது தனியார் மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 8.19 மில்லியன் தொகை உரிய மாகாண சபை நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது 173 ஆராய்ச்சி முன்மொழிவு திட்டங்களின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் 57 ஆராய்ச்சி முன்மொழிவு திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 02 ஆராய்ச்சி முன்மொழிவுகள் நிராகரிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 114 ஆராய்ச்சி முன்மொழிவுகளை அங்கீகரிப்பதற்கு அல்லது நிராகரிப்பு 2020 மே 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4(11) ஆம் பந்தியின் பிரகாரம் ஆராய்ச்சியினை ஆரம்பித்த திகதி முதல் 06 மாதங்களுக்குள் உத்தேசிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயல் முன்னேற்றத்தை உள்ளடக்கிய உள்ளக ஆராய்ச்சி அறிக்கையொன்று ஆராய்ச்சி முகாமைத்துவத்திற்கான குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 06 மாத காலத்தை விஞ்சிய 393 ஆராய்ச்சிகளுக்காக அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த அறிக்கை சமர்ப்பிக்காத 57 ஆராய்ச்சிகளுக்காக மீளாய்வாண்டின் போது முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 5.11 மில்லியன் ஆராய்ச்சி படியாக செலுத்தப்பட்டிருந்ததை மேலும் ஆராய்ச்சி படியினை கணிப்பீடு செய்யும் வழுவின் செய்தலின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிராகரம் ஆராய்ச்சி படிகள் செலுத்தப்பட வேண்டும். மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் மீண்டும் அறவிடப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக 25 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 243,276 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | மருத்துவ ஆராய்ச்சி கூட தொழில்நுட்ப நிபுணர், கதிர்வீச்சு தொழில்நுட்பவியலாளர், கதிர் வீச்சாளர் மற்றும் இலத்திரனியல் கதிர்வீச்சு தொழில்நுட்பவியலாளர் என்ற பதவிகளை புரிகின்ற துணை மருத்துவ சேவையின் உத்தியோகத்தர்களுக்காக சராசரி சாதாரண கடமை நேரங்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற மருத்துவ பரிசோதனைகளுக்காக குறித்த படியொன்றை செலுத்துதல் மிகவும் பழைய சுற்றறிக்கையை அடிப்படையாக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் தற்போது ஆய்வு கூடங்கள், கதிர்வீச்சுப் பிரிவு பௌதீக பட பிணைப்பு பிரிவு என்பவற்றை விரிவுபடுத்துதல் நவீன உபகரணங்களின் மூலம் பரிசோதனைகள் மேற்கொள்ளல் மற்றும் உரிய பிரிவுகளில் துணை மருத்துவ சேவையின் உத்தியோகத்தர்களை அதிகளவில் ஈடுபடுத்தியமை போன்ற விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு வேலை ஒழுங்கு முறை அமுல்படுத்துவதன் மூலம் மேலதிக மற்றும் குறித்த படிகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் மருத்துவரினால் எழுதப்பட்ட ஆராய்ச்சியில் உள்ளடக்கப்பட்ட உள்ளடக்கங்கள் (compounds/constituents) சிலது தனித்தனியான ஆராய்ச்சியாக காண்பிக்கப்பட்டு தனித்தனியாக பரிசோதனையாக காண்பிக்கப்பட்டு குறித்த படிகள் செலுத்தப்பட்டமையின் காரணமாக மேலதிகமான பணம் செலுத்தப்பட்டமையும் சராசரியான கடமை நேரம் மற்றும் பொதுவான கடமை நேரங்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்காக | தற்போதைய தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் உரிய ஏனைய விடயங்களை கவனத்தில் கொண்டு சேவை ஒழுங்கு முறை அமுல்படுத்துவதன் மூலம் மேலதிக மற்றும் குறித்த படிகளுக்காக நிரந்தரமாக பொதுவான வழிகாட்டி நியதிகளை ஸ்தாபிப்பதற்கும் அதன் பிரகாரம் சுற்றறிக்கையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலதிகமாக செலுத்த படிகள் மீள அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

| | | | |
|---|---|---|---|
| | தனித்தனியாக அறிக்கை பேணப்படாதிருந்தமையும் பல்வேறு வகையான பதிவுகள் மற்றும் அறிக்கைகளை பேணி குறித்த படி அதிகமான செலுத்தப்பட்டிருந்தமையும் பொதுவான கடமை நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை போல மும்மடங்கான பரிசோதனை அளவுகள் சாதாரண கடமை நேரத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு குறித்த படி வழங்கப்பட்டிருந்தமையும் மற்றும் சில பரிசோதனைகள் தொடர்பாக இந்த தகவல்களை உள்ளடக்கிய எந்தவொரு ஆவணமும் பேணிச் செல்லப்படாதிருந்த போதும் குறித்த படி செலுத்தப்பட்டிருந்தமையும், மாத்தறை, பொலன்னறுவை, பதுளை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பொது வைத்தியசாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுகாதார அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற மருத்துவ உத்தியோகத்தருக்கு 2019 செப்தெம்பர் 16 ஆம் திகதி முதல் 2019 திசெம்பர் 06 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது தேசிய சுகாதார கல்லூரியில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிக்காக விடுவிக்கப்பட்டிருந்தார். அந்த காலப் பகுதியின் போது விடுக்கப்பட்ட கடமைகளில் ஈடுபட்டதாக தின வரவு புத்தகத்தில் பிழையாக குறிப்பிடப்பட்டதுடன், அதன் அடிப்படையில் 2019 செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் இரண்டு மாதங்களுக்காக ரூபா 112,649 தொகையான விடுமுறை தின சம்பளம் மற்றும் மேலதிக கடமைப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் மீள அறவிடப்பட வேண்டும். தாபன விதிக் கோவையின் 2 ஆவது அத்தியாயத்தின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கோரப்பட்ட ரூபா 177,713.45 மில்லியன் தொகையான கட்டு நிதி தொகையில் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்டிருந்த கட்டு நிதி ரூபா 177,478.72 மில்லியன் ஆக இருந்தமையால் ரூபா 234.73 மில்லியன் கட்டுநிதி விநியோகிக்கப்படாமையினால் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை திட்டமிடப்பட்ட பிரகாரம் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | சரியான மற்றும் பொருத்தமான திட்டத்தின் பிரகாரம் கட்டுநிதி கோரப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

2.2 செலவின முகாமைத்துவம்

நிதிப் பிரமாணம் 50 இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் சரியான மற்றும் பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை கீழே காண்பிக்கப்படுகின்ற அவதானிப்புக்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 09 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,057 மில்லியன் தொகையான மொத்த நிதி ஏற்பாடும் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் சரியான மற்றும் பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 10 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 14 மூலதன செலவின விடயங்களுக்கும் ஆகவும் ஒதுக்கப்பட்டிருந்த முறையே ரூபா 196.60 மில்லியன் மற்றும் 1,476.25 மில்லியன் ஆக கூட்டு மொத்தமாக ரூபா 1,672.85 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமும் நிதிப் பிரமானம் 66 இன் மாற்றல்களின் மூலமும் 100 சதவீதம் முதல் 3593 சதவீதம் வரை ரூபா 7,838.63 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத புதிய 11 மூலதன செலவின விடயங்களுக்கு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 550 மில்லியன் நிதி ஏற்பாட்டை வழங்குவதற்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 256.52 மில்லியன் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த ஒரு புதிய செலவின விடயத்திற்கும் நிதி பிரமாணம் 66 இன் கீழ் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்த 05 செலவின விடயங்களையும் உள்ளடக்கிய 36 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 7,014.65 மில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | 45 மூலதன செலவின விடயங்களுக்காகவும் 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காகவும் ஒதுக்கப்பட்ட ரூபா 3,723.59 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் ரூபா 2,980.02 மில்லியன் நிதி ஏற்பாட்டை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தை கொண்டிருந்தது. | பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் ஆரம்பிக்கப்படுகின்ற காலப்பகுதியில் தீர்மானிக்கப்பட்ட ஆண்டின் போது நிறைவேற்ற வேண்டிய பணிகளின் அளவு சமமான வகையில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 07 மூலதன செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமானம் 66 மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட ரூபா 585 மில்லியன் தொகையான மேலதிக நிதி ஏற்பாட்டில் ரூபா 492.64 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சேமிப்புக்களின் சதவீதம் மேலதிக நிதி ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் சரியாகவும் பொருத்தமாகவும் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (எ) | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்காக 09 செலவின விடயங்களுக்காக பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாடு ரூபா 87,608.73 மில்லியனாக இருந்தது. எனினும் அந்த 09 செலவின விடயங்களின் உள்ளபடியான செலவினம் ரூபா 88,574.89 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 966.15 மில்லியனால் விஞ்சி செலவிடப்பட்டிருந்தது, அவ்வாறே மேற்கூறப்பட்ட செலவின விடயத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் கூட்டு மொத்தமாக ரூபா 371.73 மில்லியன் தொகையும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,923.53 மில்லியன் தொகையும் பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | நிதி ஏற்பாட்டை செலவிடல் தொடர்பாக முறையான மேற்பார்வை ஒன்றுடன் பொறிமுறையொன்று ஸ்தாபிப்பதன் மூலம் நிதி ஏற்பாட்டை விஞ்சுதல் காலம் தால்த்த முடியுமா என இனங்காணல் மற்றும் தேவையான நிதி ஏற்பாட்டை பெற்றதன் பின்னர் மாத்திரம் செலவினங்கள் செய்யப்பட வேண்டும். | -மேற்படி- |

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94(1) இற்கு இணங்காத வகையில் 24 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் சேமிப்பினை விஞ்சி ரூபா 2,098.62 மில்லியன் தொகையான பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்ததுடன், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் குறித்த ரீதியில் இனங்காண முடியாத 25 செலவின விடயங்களின் கீழ் ரூபா 443.35 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் ஏனைய முறையில் ஏற்பாடுகளில் ஒதுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிற வருடாந்த மதிப்பீடுகளில் அதற்காக நிதி ஏற்பாடு உள்ளதாயின் மாத்திரம் எந்தவொரு திணைக்களத்தினாலும் வேலையொன்று அல்லது சேவையொன்று வழங்கல்களுக்காக எந்தவொரு செலவினமோ கடப்பாடோ செய்ய முடியாது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (ஆ) | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய ரூபா 1,426.29 மில்லியன் தொகை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய ரூபா 74.82 மில்லியன் தொகையாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்படுகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,501.11 மில்லியன் தொகை அத்திகதியில் பொறுப்பாக கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆண்டின் ஆரம்பத்தின் பொறுப்பொன்றாக அல்லது ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட பொறுப்பொன்றாக அல்லது எழாதிருந்த ரூபா 26.72 மில்லியன் தொகையான 43 பொறுப்புக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரு பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ஆண்டின் ஆரம்பத்தில் பொறுப்பாகவோ அல்லது ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட பொறுப்பாகவோ அல்லது எழுந்திருந்த ரூபா 15.57 மில்லியன் தொகையான 51 பொறுப்புக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (ஈ) | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் இலக்க கணிப்பிடல் வழுவின் காரணாக ரூபா 125.85 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | ஆண்டின் ஆரம்பத்தில் பொறுப்பாகவோ அல்லது ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட பொறுப்பாகவோ அல்லது எழாதிருந்த ரூபா 1,000.93 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்ட பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குறிய ரூபா 234.7 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலைகள் மற்றும் 08 நிறுவனங்களுக்குரிய பொறுப்புக்கள், கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சகல வைத்தியசாலைகளுக்கும் நிறுவனங்களுக்கும் உரிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (எ) | திறைசேரி கணக்கு கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 4,581.90 மில்லியனாக இருந்த போதிலும், கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 42.756.78 மில்லியனாக இருந்தமையால் வேறுபாடு ரூபா 38,174.87 மில்லியனாக இருந்தது. | நிதிக் கூற்றுக்களையும் திறைசேரி கணக்கு கூற்றுக்களையும் இணக்கம் செய்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் வேறுபாடுகள் இனங்காணப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | -மேற்படி- |

2.4 முற்பணம் வழங்குதலும் தீர்த்தலும்

---------------------------------------------------------

(அ) செயல் நிமித்த உப கட்டுநிதி மற்றும் முற்பணங்களை விநியோகித்தல் மற்றும் தீர்த்தல் தொடர்பாக கீழே பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் திருத்தப்பட் நிதிப் பிரமானம் 371(5) இன் பிரகாரம் பணி நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் பெறப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 405 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 16.88 மில்லியன் கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி பணி நிறைவு பெற்று 01 மாதம் முதல் 11 மாதங்கள் வரையான கால வீச்சிலான தாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. மேலும், 08 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 175,720 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி 2020 யூன் 01 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நிமித்த உப கட்டுநிதி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டும். தாமதத்திற்காக தண்டப்பணம் அறவிடும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 22 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 578,482 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் 03 நாட்கள் முதல் 60 நாட்கள் வரையிலான இடைவெளியில் கையில் வைத்திருந்து மீள செலுத்தப்பட்டிருந்தது. | செயல்நிமித்த உப கட்டுநிதி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டும். தாமதத்திற்காக தண்டப்பணம் அறவிடும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | -மேற்படி- |
| (iii) | 219 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 7.82 மில்லியன் தொகையான செயல்நிதித்த உப கட்டு நிதியில் இருந்து பணி நிறைவு பெற்ற பின்னர் சேமிக்கப்பட்ட ரூபா 1.3 மில்லியன் தொகை 10 நாட்கள் 223 நாட்கள் வரையான காலம் தாமதிக்கப்பட்டு மீள கையளிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | 269 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 2.29 மில்லியன் தொகையான எரிபொருள் முற்பணம் 01 மாதம் முதல் 11 மாதங்களுக்கு இடையிலான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | 2017, 2018 மற்றும் 2019 என்ற மூன்று ஆண்டுகளில் 11 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 10.31 மில்லியன் தொகையான மூலதன முற்பணம் 2020 மே 26 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பணி நிறைவு பெற்றவுடன் முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும். | -மேற்படி- |

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் விநியோகித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இடம் மாற்றலாகிச் செல்கின்ற சந்தர்ப்பங்களின் போது கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக இடம் மாற்றலாகிச் சென்ற நிறுவனத்திற்கிடையே கடன் மீதி சீராக்கிக் கொள்ளப்படாமை, கடன் செலுத்துதல் தொடர்பான கடன் அட்டைகள் மற்றும் கடன் கோவைகளை உள்ளடக்கிய தகவல்கள் காணப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அமைச்சிலிருந்து ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், அமைச்சுக்குரிய வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என 1,580 பேர்களிடம் இருந்து ரூபா 95.21 மில்லியன் தொகை அறவிட வேண்டியிருந்ததுடன், அதில் 881 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உரியதாக அறவிட வேண்டிய ரூபா 49.36 மில்லியன் தொகை 51 சதவீதம் 05 வருடங்களை விஞ்சிய கடன் மீதிகளாகும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் இடம் மாற்றலாகிச் சென்ற 03 மாதங்களுக்குள் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சேவையை விட்டுச் செல்லும் கட்டளை விநியோகித்தலின் தாமதம் ஏற்பட்டிருந்தமை உத்தியோகத்தர்களின் தற்போதைய முகவரியை கண்டறிவதற்கு முடியாமை, கடன் கோவைகளை சமர்ப்பிப்பதில் தாமதம், 10 வருட சேவைக் காலத்தை விஞ்சியிருந்தமையால் பிணையாளர்கள் காணப்படாமை மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளாமை போன்றவற்றின் காரணமாக அமைச்சின் சேவையாற்றி இருந்து மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் வேலையை விட்டுச் சென்ற 1,549 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடம் இருந்து ரூபா 56.14 மில்லியன் தொகை அறவிட வேண்டி காணப்பட்டதுடன், அதில் 584 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உரியதாக அறவிட வேண்டிய ரூபா 20.84 மில்லியன் அதாவது 37 சதவீதம் 05 வருடங்களை விஞ்சிய கடன் மீதியாகும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (iii) | 2015 மார்ச் 26 ஆம் திகதிய 07/2015 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கான விழா முற்பணம் மாதாந்த தவணை 08 இலிருந்து மீள அறவிட வேண்டியிருந்த போதிலும், 123 உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்ட விழா முற்பணம் ரூபா 231,300 தொகை 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் முன் கொண்டுவரப்பட்டிருந்தது. | 2015 மார்ச் 26 ஆம் திகதிய 07/2015 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ''பீ'' கணக்கின் இணக்கக் கூற்றின் பிரகாரம் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 2,652.58 மில்லியனாக இருந்த போதிலும், திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் அந்த கணக்கின் மீதி ரூபா 2,653.01 மில்லியன் ஆக இருந்தமையால் வேறுபாடு ரூபா 431,555 ஆகும். வேறுபாட்டிற்குரிய காரணத்தை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்து உரிய சீராக்கங்கள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். | -மேற்படி- |
| (v) | இணக்கக் கூற்றின் பிராகரம் அமைச்சுக்கு சொந்தமான வைத்தியசாலைகளுக்கு இடம் மாற்றலாகிச் சென்ற ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 15.43 மில்லியன் ஆக இருந்ததுடன், அமைச்சிக்குரிய வைத்தியசாலைகளில் இருந்து இடம் மாற்றலாகி வருகை தந்திருந்த ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 9.01 மில்லியன் ஆகும். ஒரே விடயத்தை உள்ளடக்கிய கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதி ஏற்படும் இயலுமை காணப்படாதிருந்த போதும் அந்த மீதியில் ஏற்பட்ட முறை கணக்காய்விற்காக உறுதிப்படுத்தப்படவில்லை. | இந்த நிலைமைக்கு காரணமான விடயங்களை இனங்கண்டு உரிய சீராக்கங்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | -மேற்படி- |

2.5 வங்கி கணக்கு செயற்பாடுகள்

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேணிச் செல்லப்படுகின்ற வங்கி நடைமுறைக் கணக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 மே 31 ஆம் திகதியில் உள்ளவாறு கொடுப்பனவு செய்வதற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 3.61 மில்லியன் பெறுமதியான 105 காசோலைகள் நிதிப் பிரமாணம் 394(இ) மற்றும் 396(ஈ) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு எடுக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (ஆ) | 2020 மே 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத கொடுப்பனவுகள் ரூபா 55.23 மில்லியன் மற்றும் இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 9.2 மில்லியன் தொகைகளுக்காக விரிவான பட்டோலை சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்த தொகைகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | வங்கி இணக்கக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற சகல பெறுமதிகளுக்காகவும் விரிவான பட்டோலை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (இ) | சம்பளத்தை குறைப்பதற்காக எழுதப்பட்ட காசோலைகளில் இருந்து அதிக அளவொன்றை செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலையான வங்கி இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. 06 மாதங்களை விஞ்சியதன் பின்னர் அந்த காசோலைகளை பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அந்த காசோலைகள் உரிய பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்தா என 06 மாதங்கள் கடக்கும் வரையில் கையில் வைத்திருந்து பொது வைப்புக் கணக்கில் மாற்றப்பட்டிருந்ததா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. | சகல காசோலைகளும் தாமதமின்றி உரிய பெறுனர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டமிடலின் குறைபாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2016 பெப்ரவரி 17 ஆம் திகதிய PFD/RED/01/04/2014/01 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 03(ஈ) மற்றும் (ஊ) பந்திகளின் பிரகாரம் முறையே வருடாந்த செயற்பாடுகளான கட்டுநிதி தேவை திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் என்பன செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (ஆ) மீளாய்வாண்டின் போது குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 534 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட 03 செயற்திட்டங்கள் தொடர்பாக தகவல்கள் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திலோ அல்லது திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திலோ உள்ளடக்கப்பட்ட ரூபா 4,058 மில்லியன் தொகையான நிதி ஏற்பாட்டுடன் 11 செயற்திட்டங்களின் செயலாற்றல், செயல் முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல்களை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | வருடத்தில் அமுல்படுத்தப்பட்ட சகல செயற்திட்டங்களினதும் செயலாற்றல் மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சில செயற்திட்டங்களுக்குரிய செலவின விடயங்கள் குறிப்பிடப்படாமை மற்றும் செலவின விடயங்கள் இல்லையென குறிப்பிடுதல் பௌதீக மற்றும் நிதி செயலாற்றல்களுக்குரிய இலக்குகளை இனங்காணப்படாமை பணிகளை அமுல்படுத்துவதற்குரிய கால அட்டவணை குறிப்பிடப்படாமை மற்றும் செயற்திட்டங்கள் அமுல்படுத்துதல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்படாமை போன்ற வருடாந்த நிதி ஏற்பாட்டு தேவையினை இனங்காணப்படாமையின் காரணமாக 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் செயற்திறனான கட்டுப்பாட்டு உபாயமாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

3.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச சுகாதார முகாமைத்துவ சேவை உறுப்புரைக் கோவையின் பிரகாரம் அரசாங்க சுகாதார உதவியாளர் சேவைக்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டின் போது அந்த பரீட்சை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளும் இயலுமை காணப்படும் போது எந்தவொரு அதிகார பலமும் இன்றி சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய துறை அமைச்சின் பரீட்சைகள் பிரிவின் மூலம் நடாத்துவதற்கு பதிற்கடமை செயலாளரினால் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. திறன்கள் உள்ள சுயாதீனமான சபையினால் வினா பத்திரங்களை தயாரிக்காமை வினா பத்திரங்களில் கடமைகளில் இரகசரிய | அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை பிரமாணக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசாங்க சுகாதார முகாமைத்துவ சேவை உறுப்புரைக் கோவையின் பிரகாரம் நியமிக்கும் அதிகாரியான சுகாதார செயலாளர் அனுமதிக்கின்ற நிறுவனத்தினால் பரீட்சைகளை நடாத்துவதற்கு முடியுமாக இருந்தமையினால் சுகாதார அமைச்சின் பரீட்சைகள் பிரிவில் இந்த பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்நததுடன் பரீட்சையை நடாத்துல் தொடர்பாக அரசாங்கத்தின் குறித்துரைத்த வழிகாட்டியில் காணப்படாதிருந்தமையினால் பரீட்சைகள் பிரிவில் இது |

தன்மை பாதுகாக்கப்படாமை விடைகளை மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் வினா பத்திரங்களின் மொழி பெயர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட உத்தியோகத்தரினால் கௌரவமான சான்றிதழ் கையொப்பமிடப்படாமை அமைச்சின் பரீட்சைகள் பிரிவில் பாதுகாப்பு கமரா முறைமை உரிய பிரகாரம் செயற்படு நிலைமையில் காணப்படாமை மாதிரி விடை பத்திரங்களின் மதிப்பீடு அமைச்சின் உயர் முகாமைத்துவ உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டமை அந்த மதிப்பீட்டு மேற்பார்வை நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிப்பாளர் (பரீட்சைகள் ) மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் (பரீட்சைகள்) விடை பத்திரங்களை மதிப்பிடும் கடமைகளில் ஈடுபட்டிருந்தமை போன்ற விடயங்களின் காரணமாக அமைச்சின் பரீட்சைகள் பிரிவினால் சரியான வெளிப்படையான மற்றும் சிறந்த உள்ளக கட்டுப்பாடுகள் இன்றி இந்த பரீட்சை நடாத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. விடைப் பத்திரங்களை மதிப்பீடு செய்த உத்தியோகத்தரினால் மீண்டும் ஒரு தடவை விடைப் பத்திரங்களை மதிப்பீட்டுக்கு உள்ளாக்காமை மற்றும் விடைப் பத்திரங்கள் ஏனைய மேற்பார்வையாளரினால் மீண்டும் பரீட்சிக்கப்படாமை விண்ணப்பதாரரினால் வழங்கப்பட்டுள்ள நிச்சியமற்ற பதில்கள் தொடர்பாக விடை பத்திரங்கள் மேற்பார்வைக் குழுவினால் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக விடைப் பத்திரங்களை மதிப்பீடு பிழையானதாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் பின்னர் மீண்டும் வினா பத்திரங்களை பரீட்சித்து ஆரம்ப சந்தர்ப்பத்தில் நியமிப்பதற்கு தகைமை பெற்ற 54 விண்ணப்பதாரர்கள் அகற்றப்பட்டிருந்ததுடன், தகைமை பெற்றிருக்காத விண்ணப்பதாரர்கள் தகுதியானவர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

வரை நடாத்தப்பட்ட முறைமையின் பிரகாரம் பரீட்சையினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை இலங்கை பரீட்கைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அரசாங்கத்தின் பகிரங்க போட்டி பரீட்சைகளைப் போல விடைப் பத்திரங்களை மீண்டும் மதிப்பீடு செய்யப்படுகின்மை மற்றும் பரீட்சைகளின் விடைப் பத்திரங்களை மதிப்பிடும் வழுக்கள் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டதன் விளைவாக அதற்காக முறையான பரிசோதனை சபையொன்று நியமிக்கப்பட்டு விடைப் பத்திரங்களை மீண்டும் மதிப்பீடு செய்து திருத்தப்பட்ட பெறுபேறுகளின் அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படும். மிகுதி ஆட்சேர்ப்புக்களின் போது எதிர்கால ஆட்சேர்ப்புக்களின் போது நியமன அதிகாரியினால் சுகாதார செயலாளரின் விருப்பத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனத்தினால் நியமிக்கப்படுகின்ற பரீட்சையொன்றின் மூலம் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3.3 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் 2019 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 121,956 மில்லியன் தொகையான பிரதான 13 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு இடையே மொத்த கிரயம் ரூபா 5,130 மில்லியன் தொகையான கராப்பிட்டிய ஹெல்மட்கொல் தாய் சேய் வைத்தியசாலை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர் பார்க்கப்பட்ட மொத்த கிரயம் ரூபா 37,529 மில்லியன் தொகையான அமைச்சின் கட்டிட நிர்மாண செயற்திட்டம், இலங்கை அரசாங்கம் மற்றும் நெதர்லாந்துடன் இணைந்து வட மாகாணத்தின் வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம், இலங்கையில் புற்று நோயாளர்களுக்காக கூடிய தரத்தினை உடைய அதி சக்தியுள்ள கதிர் வீச்சு சிகிச்சையினை வழங்கும் செயற்திட்டம் மற்றும் சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய மாவட்ட மட்டத்தில் கவர்ச்சிகரமான 10 நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் அந்த வைத்தியசாலைகளில் அவசர விபத்து சிகிச்சைகள் மற்றும் சேவை வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்கள் என 04 அபிவிருத்தி செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட 100 சதவீத பௌதீக செயல் முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களில் எதிர்பார்த்த செயலாற்றல் அடையப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாக இருந்ததுடன், ஆலோசனை நிறுவனத்தின் மதிவுரையாளர் ஒருவர் நியமிப்பதற்கு தாமதமடைந்தமை, பெறுகை நடைமுறைகளில் ஏற்பட்ட தாமதம், வழிப்பாதனாக்கி முறைமையில் பொறியியலாளரின் திட்டம் சிக்கலானதாக இருந்தமை மற்றும் வேலைத்தளங்களின் ஏற்பட்ட பிரச்சினைகளின் காரணமாக ஆலோசனை நிறுவனத்தின் அங்கீகாரத்தினை பெறுதல் தாமதம் அடைந்தமை பாதகமான கால நிலைமை, நிதி ஏற்பாடு உரிய பிரகாரம் கிடைக்கப் பெறாமை, ஒப்பந்த காரருக்கு செலுத்தும் போது ஏற்பட்ட தாமதம், நிர்மாணங்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள், ஒப்பந்தகாரரினால் இணங்கப்பட்ட வேலை அட்டவணைக்கு இணங்க நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாமை மற்றும் 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட Covid – 19 தொற்றுநோய் நிலைமை போன்ற விடயங்களின் காரணமாக நிர்மாணங்கள் தாமதமடைந்திருந்தமை. தற்போது செயற்திட்டத்தின் நிர்மாணம் 97 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 2021 இன் இரண்டாவது காலாண்டின் இறுதியில் பூர்த்தி செய்வதற்கு முடியுமாக உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 50 மூலதன செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 696 மில்லியன் நிதி ஏற்பாடு அமைச்சு, இலங்கை தேசிய வைத்தியசாலைகள் மற்றும் தெற்கு கொழும்பு போதானா வைத்தியசாலைகள் என்பவற்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த 50 செயற்திட்டங்களுக்கு இடையே 07 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், 30 செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டின் போது 100 சதவீத செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 4,098 மில்லியன் தொகையான 08 செயற்திட்டங்களுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றல் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | திட்டமிடப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும். |
| (இ) | மனித வள தகவல் முறைமையின் ஒரு பகுதியாக கடமை வெளிநாட்டு பிரயாணங்களுக்காக நாளதுவரையாக ஊடகப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்றை பேணிச் செல்வதற்காக அமைச்சினால் சர்வதேச சுகாதார பிரிவில் ரூபா 4.75 மில்லியன் செலவிடப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட Fellowship Information System தரவு முறைமைக்கு நாளது வரையாக சரியான பிரகாரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த தரவு முறையை ஸ்தாபித்தல் அமைச்சில் எதிர் பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | தரவு முறைமையினை நாளதுவரையாக பேணிச் செல்லல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். |

## 3.4 குறித்துரைத்த திகதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 நவம்பர் 24 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வீடமைப்பு மற்றும் நிர்மாண நடவடிக்கை அமைச்சின் நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அங்கீகாரத்தின் கீழ் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கும் அடிப்படையில் வரியுடன் ரூபா 1,330.40 மில்லியன் கிரயமான மதிப்பீட்டில் ஹெரண தள வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையுடன் 06 மாடி கட்டிடம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 2017 நவம்பர் 27 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த கையளிக்கும் கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகதி முதல் 14 நாட்களுக்குள் வேலை ஆரம்பித்து அத்திகதி முதல் 24 மாதங்களுக்குள் அதாவது 2019 நவம்பர் 27 ஆம் திகதி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 10 மாதங்கள் தாமதத்தின் பின்னர் வேலைத்தளம் உரிய பிரகாரம் கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கட்டமாக பூர்த்தி செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்படாதிருந்த போதும், ரூபா 1,330.40 மில்லியன் தொகையான கிரய மதிப்பீடு உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்தின் முதலாவது கட்டத்திற்காக மாத்திரம் ஆக இருந்தமையும், முழுமையாக கட்டிடத்திற்காக ரூபா 2,400 மில்லியன் அண்ணளவாக செலவிடப்படுகின்றமையும் அதன் பிரகாரம் இரண்டாவது கட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்தமையும் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினால் முன்மொழியப்பட்டிருந்தது. தொடர்ந்து எழுந்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு அமைச்சினால் கணக்காய்வு திகதியாக 2020 மே 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 10 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலையினை பூர்த்தி செய்வதற்கு சரியான மேற்பார்வையுடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். |

3.5 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2019 இன் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 400 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட காராப்பிட்டிய, அம்பாறை மற்றும் யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் சிறுவர் நோய் பாதுகாப்பு தொகுதியொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டங்களுக்கு இடையே யாழ்ப்பாண வைத்தியசாலையின் செயற்திட்டம் காணி கைப்பற்றப்படாமையின் காரணமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 2019 இன் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களின் பாதுகாப்பு மற்றும் கர்ப்பிணி தாய்மார்களின் பிரச்சினைகளுக்கான நோய்களுக்கான சேவையினை வழங்குவதை முகாமைத்துவம் செய்வதற்கு கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகள் இரண்டிலும் மற்றும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையிலும் உள்ள விஷேட நிலையத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டங்களில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டம் 2020 மே 31 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைத்த காலப் பகுதியில் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியுமான வகையில் முறையான திட்டம் தயாரிக்கப்பட்டு உத்தேசிக்கப்பட்ட கால அட்டவணையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். |

3.6 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 369.14 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட இரத்தினபுரி மாகாண பொது வைத்தியசாலையின் புதிய பல் பிரிவு மற்றும் புற்றுநோய் வாட்டு தொகுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 2 ஆம் கட்டம், தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கான கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் விஷேடமாக சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்காக புதிய கட்டடமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் என்ற 04 செயற்திட்டங்களுக்காக தேசிய பெறுகைகள் திணைக்களத்தின் பரிந்துரை செய்யப்பட்ட பெறுமதியினை விஞ்சி பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையின் காரணமாக மிகுதி பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு முடியாதிருந்தது. | தேசிய பெறுகைகள் திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரை செய்யப்பட்ட பெறுமதியை விஞ்சி தயாரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டிற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரையை பெற்றுக் கொள்ளுவதற்கும் பெறுகை நடவடிக்கைகளை குறித்துரைத்த கால அட்டவணையில் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (ஆ) அங்கொடை தள வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவு பரிசோதனைக் கூடம் மற்றும் கதிர் வீச்சு போன்ற பிரிவுகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக தேசிய போட்டியாளர் கேள்வி கோருவதற்கு 2015 ஒக்தோபர் 28 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும், வரைவு கேள்வி ஆவணங்களை அங்கீகரிப்பதில் தாமதத்தின் காரணமாக அமைச்சரவை தீர்மானம் கிடைத்து 02 வருடங்களுக்கு | பெறுகை நடவடிக்கைகள் குறித்த கால அட்டவணையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

பின்னர் கேள்வி கோரப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பெறுகை கைநூலின் 4.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகை பணிகளுக்காக எடுக்கக் கூடிய ஆகக் கூடிய காலம் 06 வாரங்களாக இருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் பெறுகை பணிகளுக்காக 120 வாரங்கள் கடந்திருந்ததுடன், ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு அது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டத்தின் திட்டமிடல் நடவடிக்கைகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 24.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 14.57 மில்லியன் தொகை ஏனைய செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. மிகுதி நிதி ஏற்பாடு ஏனைய செலவினங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

3.7 வெளிநாட்டு நிதி உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் வைத்தியசாலைகளில் ஒன்று சேர்கின்ற சகல சிகிச்சைக் கழிவுகளும் உப கழிவுப் பொருட்களாகின்றமையினால் அவ்வாறான கழிவுப் பொருள் உருவாகி 48 மணித்தியாலங்களுக்குள் கிருமி நீக்கஞ் செய்து அகற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பாக முறையான பொறிமுறையொன்று தேசிய மட்டத்தில் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன், சிகிச்சை கழிவுகளின் முகாமைத்துவத்திற்காக Meta Mizer என்ற 20 இயந்திரங்கள் மற்றும் Incinerator 15 இயந்திரங்கள் வழங்கப்பட்டு | | |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தி அமுல்படுத்தும் நிலையில் 05 வருடங்கள் நடாத்திச் செல்வதற்காக மொத்த பெறுமதி ஐ.அ.டெலர் 21.11 மில்லியன் மற்றும் ரூபா 452.24 மில்லியன் தொகையான அவுஸ்ரேலிய கடன் மற்றும் உள்நாட்டு கடன் உதவி செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மூலம் தீவு முழுவதும் சகல மாகாணங்களையும் மேவுகை செய்யும் எதிர்பார்ப்பில் 06 கூறுகளாக்கப்பட்டு அரசாங்கத்தின் 134 வைத்தியசாலைகளின் சிகிச்சை கழிவுகளை அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட 15 Incinerator இயந்திரங்களில் 05 வரை குறைக்கப்பட்டு இயந்திரங்களுக்காக உடன்படிக்கை செய்யப்பட்ட ஐ.அ.டெலர் 18.45 மில்லியன், ஐ.அ.டெலர் 16.19 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு ஈடாக செயற்திட்டத்தை அமுல்படுத்தும் செயற்பாட்டு கட்டணம் (Operating fee) மாற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட செயற்பாடுகளின் உடன்படிக்கை 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் இயந்திரங்களை எண்ணிக்கை குறைவடைவதற்கு ஈடாக வருடாந்த செயற்பாட்டு கட்டணம் திருத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (ii) | அமைச்சின் செயற்திட்டப் பிரிவு, அபிவிருத்தி பிரிவு மற்றும் சுற்றாடல் பிரிவு என்ற மூன்று பிரிவுகளிலும் உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சின செயலாளருக்கு அறிவித்து கையேற்பம் இடப்பட்ட இந்த அவுஸ்ரேலிய கடன் மற்றும் உள்நாட்டு கடன் உதவி செயற்திட்ட உடன்படிக்கை 2013 ஆம் ஆண்டின் போது கையொப்பம் இடும் போது அந்த செயற்திட்டம் முழு நாட்டையும் மேவுகை செய்யும் வகையில் 134 வைத்தியசாலைகள் 06 கொத்தணிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அதில் ஒவ்வொரு கொத்தணிகளிலும் சிகிச்சை கழிவு முகாமைத்துவம் செய்ய முடியுமாக உள்ள போது 2014 ஆம் ஆண்டில் அமைச்சு உத்தியோகத்தரினால் மேல், தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களின் சிகிச்சை கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு வேறொரு தனியார் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு சாதாரணமாக வகையில் நடவடிக்கை | தற்போது இயந்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கு அருகில் உள்ள சிகிச்சை கழிவுகளை அகற்றும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் இனங்காணப்பட்டு புதிய தொகுதி திட்டமொன்று நிர்மாணிக்கப்பட்டு அமுல்டுத்தப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவுஸ்ரேலிய கடன் மற்றும் உள்நாட்டு கடன் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மேல், தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட Meta Mizer 10 இயந்திரங்கள் Incinerator 08 இயந்திரங்கள் என்பன அந்த செயற்திட்டத்தில் இருந்து அகற்றப்பட்டு அந்த 03 மாகாணங்களிலும் சிகிச்சை கழிவு முகாமைத்துவத்திற்கு அந்த தனியார் கம்பனிக்கு இடமளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமையில் அவுஸ்ரேலிய கடன் மற்றும் உள்நாட்டு கடன் உதவி செயற்திட்டத்தின் கீழ் சிகிச்சை கழிவு முகாமைத்துவம் செய்யும் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | அமைச்சின் உத்தியோகத்தரினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பாக உள்ள மேற்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களின் சிகிச்சைக் கழிவுகளை அகற்றும் ஒப்பந்தம் வேறொரு தனியார் கம்பனிக்கு வழங்கும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த கம்பனிக்கு சாதகமான வகையில் போலியாக உடன்படிக்கை செய்வதற்கும் அவுஸ்ரேலிய கடன் மற்றும் உள்நாட்டு கடன் உதவி செயற்திட்டத்தின் விடயப்பரப்பில் 50 சதவீதத்திற்கு மேவுகை செய்யப்பட்ட 03 மாகாணங்களை மாற்றி கொத்தணித் திட்டத்தை ஒழிப்பதற்கும், வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் மாத்திரம் கழிவுப் பொருள் சிகிச்சை கழிவுப் பொருள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அவுஸ்ரேலிய கடன் மற்றும் உள்நாட்டு கடன் உதவி செயற்திட்ட உடன்படிக்கையை திருத்தம் செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவுஸ்ரேலிய கடன் மற்றும் உள்நாட்டு கடன் உதவி செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட கடன் தவணை மற்றும் வட்டியை செலுத்துவதற்கு மேலதிகமாக மேற்கூறப்பட்ட 03 மாகாணங்களில் அமைந்துள்ள கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 21 வைத்தியசாலைகளின் சிகிச்சை கழிவுகளை அகற்றுவதற்காக 2016 | அவுஸ்ரேலிய கடன் உதவி செயற்திட்டத்தின் ஆரம்ப உடன்படிக்கைக்குரியதாக பின்னர் மேற்கொள்ளப்பட்ட வேறுபாடுகளை உள்ளடக்கி திருத்தப்பட்ட உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட வேண்டும். இது தொடர்பாக பரீட்சித்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கும், அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான 04 வருட காலப் பகுதியில் அந்த தனியார் கம்பனிக்கும் ஏனைய நிறுவனத்திற்கும் செலுத்துவதற்கு ஏற்பட்ட மொத்த தொகை ரூபா 384.12 மில்லியனாக இருந்ததுடன், அது அரசாங்கத்திற்கு மேலதிக செலவினப் பொறுப்பாக இருந்தது. | | |
| (iv) | அவ்வாறே அவுஸ்ரேலிய கடன் மற்றும் உள்நாட்டு கடன் உதவி செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட Meta Mizer 10 இயந்திரங்கள் மற்றும் Incinerator இயந்திரங்களின் மாதிரிகளில் குறிப்பிடப்பட்ட இயலளவில் செயற்படாதிருந்ததடன், இயந்திரங்களில் இருந்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் சுற்றாடலுக்கு அகற்றுவதற்கு பொருத்தமான நிலைமையில் உள்ளமை சுதந்திரமான பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கமான சில வைத்தியசாலைகளில் சிகிச்சை கழிவுகள் ஒரு இடத்தில் அகற்றும் செயற்பாடுகள் (Cluster System) முழுமையாக வெற்றியடைந்திருக்கவில்லை. மேலும் இந்த இயந்திரத்தின் மூலம் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் முறையான பிரகாரம் உள்ளூராட்சி அதிகார சபைகள் ஊடாக அகற்றும் முறையான திட்ட முறைமையொன்று நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அழிவடையான கழிவுப் பொருட்களில் பற்றீரியா அல்லது ஏனைய விசக் கிருமிகள் இல்லாமைக்கு சுதந்திரமான பரிசோதனை மூலம் உறுதிப்படுத்துவதற்கும் அழிவடையாத கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக பொருத்தமான இடமொன்றை தெரிவு செய்வதற்கும் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் இந்த இயந்திரங்களை பயன்பாட்டிற்கு எடுத்து சிகிச்சை கழிவ முகாமைத்துவத்திற்காக பொருத்தமான பொறிமுறையொன்றை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது Japanese non Project Grant Aid நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உயிரியல் வைத்திய பொறியியல் சேவை பிரிவிற்கு நன்கொடையாக கிடைத்த 75 Ultra Sound Scanners இன் மொத்த கிரயம் ரூபா 337.24 மில்லியனாக இருந்ததுடன், அதில் 51 மத்திய அரசாங்கத்தின் 41 வைத்தியசாலைகளுக்கும் 24 மாகாண சபைகளின் 23 வைத்தியசாலைகளுக்கும் பகிர்ந்தலிக்கப்பட்டிருந்தது. எனினும் உரிய முகவர் கம்பனியினால் இந்த உபகரணங்கள் சரியான பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டமைக்கு உயிரியல் வைத்திய பொறியியல் சேவை பிரிவினால் | பராமரிப்பு மற்றும் சேவை கிரயங்களை குறைப்பதற்காக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கோ அல்லது உதவி அடிப்படையில் உபகரணங்களை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களின் போது சேவை மற்றும் பராமரிப்புக்குத் தேவையான எதிர் காலத்திற்கான கூறு | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

பரீட்சிக்கப்பட்டு சேவை சான்றுதழ் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. மத்திய அரசாங்கத்தின் 02 வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட இந்த 02 உபகரணங்கள் மற்றும் மாகாண சபையின் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட உபகரணமொன்று 2020 யூன் 23 ஆம் திகதி வரையிலும் 07 மாதங்கள், 01 வருடம் மற்றும் 04 வருட காலம் முதல் செயற்பாடற்று காணப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் 02 வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட 02 உபகரணங்களில் 01 உபகரணம் 07 மாதங்களுக்கு பின்னர் பழுதுபார்க்கப்பட்ட போதும் உயிரியல் வைத்திய பொறியியலாளருக்கு வரவழைத்து பரீட்சித்து பழுதுபார்த்தலில் ஒரு பகுதி அல்லது ஈடுபடுத்தப்பட்ட மேலதிக உதிரிப்பாகங்கள் தொடர்பாகவும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலை காணப்படுகின்றமைக்கான சான்றிதழை பெற்றுக் கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மிகுதி உபகரணங்களை பழுதுபார்ப்பதற்காக உரிய முகவர் கம்பனியினால் எடுத்துச் செல்லப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2020 யூன் 23 ஆம் திகதி வரையிலும் மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை. உபகரணங்களை வைத்தியசாலையில் இருந்து வெளியே எடுத்துச் செல்லும் போது உபகரணங்களை வழங்குனரின் வேலைத் தளத்தில் இருந்து பழுதுபார்க்க வேண்டியமைக்கு சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. அவ்வாறே உபகரணங்களை பழுதுபார்க்கும் வரை இந்த உபகரணங்களுக்கு சமமான செயற்பாட்டுடன் உள்ள உபகரணங்களை வழங்க வேண்டியிருந்த போதிலும் செயற்படு நிலைக்கு சமமற்ற உபகரணமொன்று வழங்கப்பட்டிருந்தது.

இந்த உபகரணங்கள் நன்கொடையாக கையேற்பதற்கு இணங்குவதற்கு முன்னர் அவற்றின் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக உரிய கம்பனியுடன் இணக்கப்பாட்டிற்கு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மத்திய அரசாங்கத்தின் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 51 உபகரணங்களில் ஒரு

விலைகள் கோரப்பட வேண்டும். காணப்படுகின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமைக்கு இணங்க வேண்டும். உபகரணங்கள் செயற்பாடற்று இருப்பதை தடுப்பதற்காக உபகரணங்களை நாளது வரையாக பேணிச் செல்லல் வேண்டும். உபகரணங்களை ஸ்தாபிக்கும் போது, பழுதுபார்க்கும் போது, பராமரிப்பு நடவடிக்கைகளை செய்யும் போது மற்றும் உபகரணங்களை பழுதுபார்ப்பதற்காக வைத்தியசாலையில் இருந்து வெளி எடுத்துச் செல்லும் போதும் மற்றும் மீண்டும் ஸ்தாபிக்கும் போதும் உயிரியல் வைத்திய பொறியியல் பதவியின் பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

வருட உத்தரவாத காலம் 2016 பெப்ரவரி மாதத்தில் முடிவடைந்ததன் பின்னர் அவற்றின் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக 2107 யூலை 27 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த உபகரணத்திற்காக ரூபா 450,000 வீதம் 51 உபகரணங்களுக்காக வருடாந்த சேவை மற்றும் பராமரிப்பு கட்டணமாக ரூபா 22.95 மில்லியன் உரிய முகவர் கம்பனிக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது, அந்த கட்டணம் 2018/2019 ஆம் ஆண்டின் பொது 5 சதவீதமும் 2019/2020 ஆம் ஆண்டின் போது 7 சதவீதமும் படி அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், முன் இணக்கப்பாட்டில் கைச்சாத்திடப்படாமையினால் உரிய முகவர் கம்பனியின் நிபந்தனையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

23 மாகாண சபை வைத்தியசாலைகளுக்க வழங்கப்பட்ட பகிர்ந்தளிக்கப்பட்ட இந்த 24 உபகரணங்களின் சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மஹியங்கனை தள வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட ரூபா 4.49 மில்லியன் தொகையான அந்த உபகரணங்களின் சேவை மற்றும பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான அதன் உத்தரவாத காலத்தின் பின்னர் கடந்திருந்த ஒரு வருடத்தின் போது ரூபா 1.5 மில்லியன் அந்த முகவர் கம்பனிக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

3.8 பெறுகைகள்

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் 2019/2020 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக பொருத்தமான ஒப்பந்த காரர் ஒருவர் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தது. அதன் காரணமாக 2019 பெப்ரவரி 28 ஆம் திகதியில் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த 33 நிறுவனங்களின் பாதுகாப்பு சேவையினை வழங்கிய பழைய ஒப்பந்தகாரரிடம் உடன் படிக்கைக் காலம் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு பழைய ஒப்பந்தத்தின கூறுவிலையின் அடிப்படையில் செலுத்துவதற்கும் அமைச்சின் பெறுகைக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. குறித்த பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் 2019 மே 01 ஆம் திகதி மீண்டும் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கும் செலுத்த வேண்டிய கட்டணத்தை திருத்துவதற்கும் அமைச்சின் பெறுகைக் குழுவின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் அமைச்சின் பதிற் கடமை செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்திற்காக பெறுகைக் குழு மேவுகை அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், முறையான அங்கீரம் இன்றி கூறு விலையை திருத்தியதன் பிரகாரம் செலுத்தியதன் காரணமாக 33 நிறுவனங்களின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 06 நிறுவனங்களுக்கு 2019 மே 01 ஆம் திகதி முதல் 2019 யூலை 31 ஆம் திகதி வரையான 03 மாதத்திற்காக ரூபா 1.55 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | சகல நிறுவனங்களுக்காகவும் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை கணிப்பிட்டு அதனை பெறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிட வேண்டும். | உயிர்த்த ஞாயிறு தினத்தில் ஏற்பட்ட பயங்கரவாத தாக்குதல் மூலம் ஏற்பட்ட நிலைமையை கருத்திற் கொண்டு அமைச்சு பெறுகைக் குழு சீ1 இற்கு 2019 மே 28 ஆம் திகதிய மற்றும் 2019 யூலை 03 ஆம் திகதிய உரிய சேவைக் காலத்தை நீடித்தல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை போதுமான அளவு அதிகரித்தல் தொடர்பான விடயங்களை காண்பித்ததன் பின்னர் அந்த குழுவினால் அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரிச்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 14.26 மில்லியன் செலவில் Five Part Hematology Analyzer with Slide Steiner இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கைச் சட்டத்தின் பிரகாரம் 05 மில்லியனை விஞ்சிய இந்த ஒப்பந்தத்திற்காக பதிவு செய்யும் சான்றிதழ் பெறப்படாதிருந்ததுடன். ஒப்பந்த காரரிடம் இருந்து இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது, ஒப்பந்த நிபந்தனைகளில் தாமதக் கட்டணம் அறவிடப்படுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்த போதும், அது தொடர்பாகவும் அதனை அறவிட்டு தாமதக் கட்டணம் எவ்வளவு என ஒப்பந்த தரவுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பெறுகைக் குழு தீர்மானம் ஒன்று பெற்றுக் கொள்ளப்படாமல் ஒப்பந்த பெறுமதியில் ஒரு வாரத்திற்கு 01 சதவீதமும் ஆகக் கூடியது 5 சதவீதமும் வரை தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | ரூபா 5 மில்லியனை விஞ்சிய ஒப்பந்தங்கள் தொடர்பாக 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (இ) | உயிரியல் வைத்திய பொறியியல் சேவைப் பிரிவிற்கு Defibrillator (Nihon Kohden, TEC – 8352k இல் 500 உப பாகங்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சு பெறுகைக் குழுவினால் கூறுவிலை கோரப்பட்டிருந்த போதும், இந்த பெறுகைகளுக்காக தொழில் நுட்ப மதிப்பீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.<br>அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்து உயிரியல் வைத்திய பொறியியல் சேவை பிரிவின் பணிப்பாளர் (நிதி) இனால் தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், தேசிய ஔடதங்கள் நிர்ணய அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் பெறப்படாது வழங்குனரை தெரிவு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. 500 உப | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக தாபன விதிக் கோவையின் 2 ஆவது பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பாகங்களின் கிரயம் ரூபா 33.24 மில்லியன் ஆக இருந்தமையால் பெறுகை தீர்மானம் அமைச்சுப் பெறுகைக் குழுவினால் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்குப் பதிலாக பிரதேச பெறுகைகள் குழுவினால் 200 உப பாகங்கள் மாத்திரம் ரூபா 9.17 மில்லியனுக்கு கொள்வனவு செய்வதற்கான தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1(iv) மற்றும் 5.3.1(ஈ) வழிகாட்டிகள் மற்றும் அரசாங்க பெறுகைகள் பணிக் கோவையின் 2.11.3, 2.12 மற்றும் 6.3.6 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையினால் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 5.44 மில்லியன் செலவில் விஷேட புற்றுநோய் ஒழிப்பு மருந்து களஞ்சியமொன்றை அமைப்பதற்காக குளிரூட்டி கொள்னலனொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. விஷேட புற்றுநோய் ஒழிப்பு மருந்துகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பொருத்தமற்ற மாதிரிகளுடன் குளிரூட்டி கொள்கலன் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் பயனற்று வைக்கப்பட்டிருந்ததுடன், அதன் உத்தரவாத காலமும் முடிவடைந்திருந்தது. அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.6(அ) மற்றும் கேள்வி ஆவணங்களில் 2.8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியில் 05 சதவீதம் ஆன ரூபா 0.27 மில்லியன் நிறுத்தி வைத்தல் பணம் ஒரு வருடம் முடிந்ததன் பின்னர் திருப்திகரமான சேவைக் காலத்தின் பின்னர் விடுவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் முழுப் பணமும் செலுத்தப்பட்டிருந்தது. தாமதக் கட்டணம் அறவிடல் தொடர்பாக பிரிவில் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக 09 மாத தாமதக் கட்டணம் அறவிட முடியாதிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2016/2017 ஆம் ஆண்டுகளுக்காக சுகாதார அமைச்சை உள்ளடக்கிய அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் சுத்தகரிப்பு சேவைகளை பெற்றுக் கொள்ளும் ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு முன்னர் 2017/2018 ஆம் ஆண்டிற்காக பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் ஒப்பந்த காரரின் காலம் 17 மாதங்கள் முதல் 20 மாதங்கள் வரையிலான காலத்தினால் நீடிக்கப்பட்டிருந்தது. 2018/2019 மற்றும் 2019/2020 ஆம் ஆண்டுகளுக்காக சுத்திகரிப்பு சேவைகளை பெற்றுக் கொள்ளும் போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>அந்தந்த வருடங்களுக்காக தயாரிக்கப்பட்ட பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் ஒப்பந்தம் கையளிக்கப்படாதிருந்ததுடன், தாமத காலம் 09 மாதங்கள் முதல் 20 மாதங்கள் வரையாக இருந்தது. 2017/2018 ஆம் ஆண்டுகளுக்காக 08 நிறுவனங்களுக்குரியதாக கிடைத்த கூறுவிலைகளை மிகவும் உயர்ந்த பெறுமதியுடன் இருந்தமையினால் அந்த கேள்வி குறைக்கப்பட்டு மீண்டும் புதிதாக கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்த போதிலும், மேலும் 17 நிறுவனங்களுக்காக கிடைக்கப் பெற்ற கூறுவிலைகள் மிகவும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும், அந்த கூறுவிலைகளை இரத்துச் செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. அதன் பிரகாரம் பெறுகைக் குழு தீர்மானம் வெளிப்படையானதாக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்த காலத்தில் ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு முடியுமான வகையில் பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும். பெறுகைக் குழு தீர்மானம் உயர்ந்த வெளிப்படையானதாக இருக்க வேண்டும். | -மேற்படி- |
| (ஊ) | களுபோவில தெற்கு கொழும்பு போதனா வைத்தியசாலைக்காக 2018/2019 ஆம் ஆண்டிற்காக சுத்தகரிப்பு செய்யும் சேவைகளை வழங்குவதற்காக கிடைக்கப் பெற்ற கூறு விலைகள் அசாதாரணமான உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தமையினால் வருடாந்த ஊழிய கிரயம் வருடாந்த மொத்த | இது தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு தாபன விதிக் கோவையின் 2 ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| கிரயங்களை குறைத்து கேள்வியை கையளித்து 2018 திசெம்பர் 31 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சின் பெறுகைகள் C 1 குழு பரிந்துரைத்திருந்தது. எனினும் பெறுகை எல்லையினை விஞ்சும் வகையில் இந்த பெறுகைகள் அமைச்சின் பெறுகைக் குழு A இற்கு அனுப்பப்பட்டிருந்தது, எவ்வாறாயினும் 2019 சனவரி 23 ஆம் திகதி நடைபெற்ற பெறுகைக் குழு A இனால் கூறுவிலைகள் திருத்தப்படாமல் 2020 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 113.63 மில்லியன் தொகையில் இந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2019/2020 ஆம் ஆண்டிற்காக இந்த ஒப்பந்தம் ரூபா 81.10 மில்லியனுக்கு கைளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019/2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018/2019 ஆம் ஆண்டின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 32.53 மில்லியனால் அதாவது 40 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சுக்குரிய வைத்தியசாலைகள் மற்றும் 19 நிறுவனங்கள் 12 வருட காலத்தில் 31 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வுகளின் போது வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகளுக்குரிய நிதி பெறுமதி கணிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன், அந்த பற்றாக்குறைகளுக்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இருக்குமாயின் அவர்களிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு 2020 மே 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பற்றாக்குறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் 2 ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேவையான பௌதீக வசதிகளை அதிகரிக்கப்பட்ட போதிலும், வைத்தியர்களை உள்ளடக்கிய பதவியணியினர் பற்றாக்குறையின் காரணமாக நுவரெலியா வைத்தியசாலையில் நாட்பட்ட நோய் பிரிவு,<br><br>தோல் நோய் பிரிவு மற்றும் பணம் அறவிடும் சேவைகள் வழங்குகின்ற வாட்டுக்கள் என்ற பிரிவுகள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பௌதீக வளங்களை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்படும் போது அதன் வழங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக தேவையான மனித வளங்களை பெறுகின்ற முறையும் திட்டமிடப்பட வேண்டும். வைத்தியர்களை உள்ளடக்கிய பதவியிணியினரின் பற்றாக்குறைகளை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (இ) | குருநாகலை போதனா வைத்தியசாலையில் புதிய தாய் சேய் பிரிவிற்குத் தேவையான உயிரியல் வைத்திய மருத்துவ உபகரணங்கள் 131 இனை கொள்வனவு செய்வதற்காக ரூபா 61.54 மில்லியன் நிதி ஏற்பாடு 2017 ஆம் ஆண்டின் போது கோரப்பட்டிருந்த போதிலும், 106 உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 37.73 மில்லியன் நிதி ஏற்பாடு மாத்திரம் உயிரியில் வைத்திய பொறியியல் சேவைகள் பிரிவினால் வழங்கப்பட்டிருந்தது. மிகுதி நிதி ஏற்பாடு 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போதேனும் வழங்கப்படாதிருந்தமையினால் புதிய தாய் சேய் அலகுக்குச் சொந்தமான 04 சத்திர சிகிச்சைக் கூடங்களில் 03 சத்திர சிகிச்சைக் கூடங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சைக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை. | வைத்தியசாலைகளில் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவு சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் உயிரியில் வைத்திய உபகரணங்கள் செயற்பாடற்று காணப்படுகின்றமையை தவிர்ப்பதற்காக திட்டமிடப்பட்ட பிரகாரம் நிதி ஏற்பாடு மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (ஈ) | சவூதி அபிவிருத்தி நிதியத்தினால் இலகு கடன் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட அமெரிக்க டெலர் 12 மில்லியனுக்கு சமமான ரூபா 2,791.16 மில்லியன் கடன் தொகையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் | பதவியணியினரின் பற்றாக்குறையை பூர்த்தி செய்து விளைவற்று காணப்படுகின்ற அவசர சிகிச்சை அளகில் நோயாளர்களுக்கு அவசர சேவைகளுக்கா விரைவாக ஈடுபடுத்துவதற்கு | -மேற்படி- |

நிர்மாணிக்கப்பட்ட தலை மற்றும் முதுகந்தண்டு சம்பந்தமான நோய்களுக்காக 300 கட்டில்களையும் உடைய அதிநவீன மூன்றாம்நிலை சிகிச்சை நிலையமொன்றை உள்ளடக்கிய புதிய அலகொன்று 2010 ஆம் ஆண்டு முதல் நோயாளர்களின் அத்தியவசிய சேவைகளுக்காக திறக்கப்பட்டிருந்தது. அலகு திறக்கப்பட்டு 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும், வைத்திய பதவி அணியினரில் 16 பேர்களை உள்ளடக்கிய 159 பேர்களை உடைய பதவி அணியினரின் பற்றாக்குறையின் காரணமாக இந்த அலகில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அவசர சிகிச்சை பிரிவுகளில் 06 இல் ஒரு நோயாளி அவசர சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அவசர சிகிச்சை அளகில் அசவர சிகிச்சை பிரிவொன்று (High Defensive Unit) ஆக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணத்தினால் அவசர சிகிச்சை அளகுகளில் காணப்படும் ஒட்டுமொத்த கட்டில்களின் எண்ணிக்கையும் 44 சதவீதத்திற்கு சமமாக 29 கட்டில்கள் பயனற்று காணப்பட்டது.

அவசர சிகிச்சை அலகுகளின் சேவையில் ஈடுபடுக்கின்ற தாதியர்களுக்காக பட்டபிக் ஆரம்ப தாதி கல்லூரியினால் விஷேட அளவில் பயிற்சியொன்று, பயிற்சி உத்தியோகத்தின் மேற்பார்வையின் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இந்த அவசர சிகிச்சை பிரிவு 06 இற்கு நியமிக்கப்பட்டுள்ள 185 ஆக ஒட்டு மொத்த தாதியர் பதவி அணியினரில் 04 சதவீதத்திற்கு சமமான 08 தாதி உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் அந்த பயிற்ச் வழங்கப்பட்டிருந்தது.

தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறே பிரிவுகளில் சேவையாற்றுகின்ற தாதியர்களுக்காக போதியளவான பிரகாரம் தேவையான பயிற்சிளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2018 செப்தெம்பர் மாதத்தின் போது ரூபா 9.89 மில்லியன் செலவில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மாதிரிகளை பரிசோதனை செய்யும் (Histopathology Lab) ஆய்வு கூடத்திற்காக Fully Automated slide preparation System (Biogenex fully Automated IHC Strainer With Glass Slipper என்ற இயந்திர முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த முறைமைக்காக தேசிய ஔடதங்கள் நிர்ணய அதிகார சபை விநியோகித்த பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாத கேள்வி தாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்ததுடன், செயலாற்றல் பிணை முறியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பிரதேச பெறுகைக் குழுவின் சிபாரிசுக்காக நிறுவன தலைவரின் அங்கீயரம் பெறப்பட்டிருக்கவில்லை. | தேசிய ஔடதங்கள் நிர்ணய அதிகார சபை விநியோகிக்கின்ற பதிவுச் சான்றுதழ் சமர்ப்பக்கப்படாத கேள்விதாரருக்கு பெறுகை கையளிக்கப்பட்டமை செயலாற்றல் பிணை முறியொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் பிரதேச பெறுகைக் குழுவின் பரிந்துரைக்காக நிறுவன தலைவரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை தொடர்பாக உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (ஊ) | கொழும்பு தேசிய வைத்தியசாலையில் துணி சலவை செய்யும் சேவை வழங்குகின்ற மின்சார லொன்றிக்கு ரூபா 2.98 மில்லியன் செலவில் 2018 மே 23 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட மின் இரும்பு உருளை பயன்படுத்துவதில் வசதியீனத்தின் காரணமாக பயன்படுத்த முடியாமல் விளைவற்று காணப்பட்டது. | மின் இரும்பு உருளையை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |
| (எ) | கந்தளாய் தள வைத்தியசாலையினால் ரூபா 110.22 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 30 மருத்துவ உபகரணங்கள் மற்றும் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட அந்த வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட பெறுமதி வெளிப்படுத்தப்படாத 49 மருத்துவ உபகரணங்கள் அந்த வைத்தியசாலையில் ஸ்தாபித்து தீவிர சிகிச்சை பிரிவிற்கு | உணர்வு மாற்றும் வைத்தியர்களை வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து நோயாளர்களின் அவசர சேவைகளுக்காக அவசர சத்திர சிகிச்சை அளகை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த போதிலும், உணர்விழக்கச் செய்யும் வைத்தியர்கள் காணப்படாமையின் காரணமாக 2016 திசெம்பர் முதல் 2018 யூலை மாதம் வரையான காலப் பகுதியில் அவ்வப் போது மூடப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் அந்த அலகு அவசர சிகிச்சை அலகாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்த செல்லும் போக்கிற்கு தீர்வாக சீறுநீரக நோயாளர்களின் சத்திர சிகிச்சை சேவையினை பிரதேச ரீதியில் வழங்கும் நோக்கில் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 3.78 மில்லியன் செலவில் கந்தளாய் தள வைத்தியசாலையில் இரத்த மாற்று முன் அலகொன்றை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2107 ஆம் ஆண்டின் போது ரூபா 11.94 மில்லியன் செலவில் டயலசிஸ் (Dialysis) 03 இயந்திரங்கள் மற்றும் 03 மல்டிபெரா மொனீடர்ஸ் ( multi Para monitors ) என்பவற்றை உள்ளடக்கிய இந்த அலகிற்காக 44 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அளகிக்கு தேவையான சகல உபகரணங்களும் பதவி அணியினரும் நியமிக்கப்பட்டிருந்த போதும், 2020 திசெம்பர் மாதம் வரையில் இந்த பிரிவில் நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பிரிவு விளைவற்று காணப்பட்ட 02 வருடங்களின் போது அன்னலவாக 6,570 தடவைகள் அளவில் இரத்த மாற்றுக்கள் (Dialysis) செய்வதற்கு முடியுமாக இருந்தமை கைவிடப்பட்டிருந்தது. | விஷேட நிபுனத்துவ வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு சிறுநீரக நோயாளர்களின் சத்திர சிகிச்சை சேவைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், உபகரணங்களை பயன்படுத்துவற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | -மேற்படி- |

3.10 நட்டம் மற்றும் இழப்புக்கள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 111 ஆம் தலைப்பின் கீழ் அறிக்கையிடப்பட்ட நட்டங்கள் மற்றும் கைவிடல்களின் பெறுமதி ரூபா 591.47 மில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 91,850 மாத்திரம் ஆண்டின் போது பணமாக அறவிடப்பட்டிருந்தது. வைத்தியசாலைகள் மற்றும் 25 நிறுவனங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பணமாக அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் ரூபா 27.32 மில்லியன் ஆகும். | நிதிப் பிரமாணம் 104 முதல் 109 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (ஆ) | அங்கொடை தேசிய மனநோய் சுகாதார கல்லூரி மற்றும் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்காக பச்சை உணவுகளை வழங்குவதற்காக 2018 பெப்ரவரி முதல் 2019 சனவரி வரையான காலத்திற்குரியதாக செலுத்தும் போது பெறுகைகள் தீர்மானத்தின் மூலம் இணங்காத வகையில் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 8.14 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 1.32 மில்லியன் தொகை மீள அறவிடப்பட்ட போதிலும், ரூபா 6.81 மில்லியன் தொகை 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. நிபந்தனைகளில் உள்ளடக்கப்படாமையின் அடிப்படையில் அந்த பணத்தை அறவிடுதல் பிரச்சினைக்குரியதாக இருந்தது. | பெறுகைகள் தீர்மானத்திற்கு இணங்கும் வகையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், உடன்படிக்கை நிபந்தனைகளின் குறித்த பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் 2 ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

3.11 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பட்டபின் கற்கை நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றதன் பின்னர் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாமை, சேவையை அறிக்கையிட்டதன் பின்னர் கட்டாய சேவைக் காலத்தில் அரசாங்கத்திற்கு சேவையினை வழங்காமை மற்றும் வேலை வாய்ப்பிற்காக சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடு சென்றதன் பின்னர் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாமை போன்ற விடயங்களின் காரணமாக அரசாங்கத்துடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை பிணைமுறியை மீறிய 95 வைத்தியர்களிடம் இருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய தொகை ரூபா 81.91 மில்லியன் ஆகும். சேவையை விட்டுச் சென்ற 107 வைத்தியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய பணம் தொடர்பான சரியான தகவல்கள் அறிக்கையிடப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக உடன்படிக்கை பிணைமுறியினை மீறிய வைத்தியர்களிடம் இருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய தொகையை இதயினை விட அதிக பெறுமதியொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு பொருத்தமான மற்றும் போதியளவான உள்ளக கட்டுப்பாடு முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கும் உடன்படிக்கையை மீறிய நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட உடன்படிக்கைகளை தயாரிப்பதற்குள்ள இயலுமை தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும் அந்த பொறுப்புக்களை புறக்கணித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. |
| (ஆ) அமைச்சின் கீழ் உள்ள 16 தாதியர் பயிற்சி கல்லூரிகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 1999 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான 18 வருட காலப் பகுதியில் ஆட்சேர்க்கப்பட்ட மாணவ தாதியர்களுக்கு இடையே பயற்சியினை விட்டுச் சென்ற மாணவ தாதியர்களின் எண்ணிக்கை 861 ஆக இருந்ததுடன், அதில் 706 மாணவர்களிடம் இருந்து அறவிட | -மேற்படி- | -மேற்படி- |

வேண்டிய மொத்த தொகை ரூபா 281.99 மில்லியன் ஆகும். எனினும், கணக்காய்விற்கு அவ்வப் போது சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த காலத்தில் பயிற்சியினை கைவிட்டுச் சென்ற மாணவ தாதி மாணவர்களின் எண்ணிக்கை 1,000 இனை விட அதிகளவாக இருந்தமையும் அவர்களிடம் இருந்த அறவிட வேண்டிய தொகை ரூபா 325.33 மில்லியாக இருந்தமையும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பயிற்சியை விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கையை மற்றும் அறவிட வேண்டிய பணம் தொடர்பாக முழுமையான மற்றும் சரியான தகவல்கள் அமைச்சிடம் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| (இ) | 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரசாங்கத்தின் நிறுவனங்களிலும் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை தரல் மற்றும் வெளிச் செல்லல் என்பவற்றை உறுதிப்படுத்தல் தொடர்பான அறிக்கையை வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், 2017 மே 12 ஆம் திகதிய திறைசேரி செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட DMS/0016 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சுகாதார பதவி அணியினரின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் கைவிரல் அடையாள இயந்திரம் 2017 யூலை 01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படாதிருக்குமாயின் தற்போதைய சம்பளத்தின் பிரகாரம் மேலதிகநேர படி செலுத்தாதிருப்பதற்கு கண்காணித்துக் கொள்ளல் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் வருமை மற்றும் வெளிச் செல்லுகைகள் தொர்பான அறிக்கையினை பேணுவதற்கும் அதற்கு இணங்கும் வகையில் உத்தியோகத்தர்களின் மேலதிக கடமை படிகளை செலுத்துதல் தொடர்பாகவும் தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

